முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆனிமாதம் 17 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆனிமாதம் 24 திகதி வரை
(02.07.2023 ஞாயிறு முதல் 09.07.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானிகள் மகாசக்திகள் என
   நம்பிக்கையூட்டி காத்தல் புரிகின்ற
   கனிவேலவன் தயவாய் அருள்கின்ற
   கருணைநிறைந்த இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே சோபகிருது மிதுனதிங்கள்
   தக்கமூவையீர் திகதிமேல் அறுநான்கு திகதிவரை
   இன்னாளதனில் நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த வாரஆசி
3. ஆசிதனை அரங்கஞானி கேட்க
   அகத்திய மகரிஷியானும் உரைப்பேன்
   பேசிட புண்ணியவான்கள் ஒருபுறம்
   புகழ்மிக்க தருமசேவை ஆற்றிவர
4. வருகவே இயற்கை பொய்க்கா
   வருஷிக்கும் நல் மழைதானே
   தருமத்தால் நீர்வளம் குன்றா
   தமிழகம் இந்தியா காக்கப்படும்
5. காக்கும் ஆளுமை சக்திகள்
   கடமைதனை மறந்து இடரென
   ஆக்கமின்றி சுயநலம் கொண்டு
   ஆளுமைதனை தொடர நேர்ந்தால்

6. நேர்ந்தால் மேலும் கீழுமென
நீதியின் பிடியில் அகப்பட்டு
வருந்தவே தப்பு செய்தவர்கள்
வதை கண்டடைய நேரும்
7. நேருமைதனை மறந்துமே
நீதியின் மேல் பற்றுவைத்து
தருமம் நீதியை கைவிட்டவர்கள்
தண்டணைக்கு வர நேருமப்பா
8. அப்பனே கலிமுற்றி இனி
அகலும் காலச் சூழலும்
சுப்பனால் நிகழ இருக்க
சுத்தி செய்யப்படும் புவிதன்னில்
9. தன்னிலே சாதிமதக்கட்சி கழகமென
தரணியில் கடந்து ஆளுமைகள்
நன்னெறிக்கு வந்து செயல்படவே
நம்பிக்கை தரும் ஆளுமையாக மாறி
10. மாறியே ஆறுமுகனார் ஆசிபட
மகா பாதுகாப்பு நிரம்பி
தேறிவரும் இந்திய தமிழக வளர்ச்சி
தெய்வீக ஞான ஆட்சிக் காலமாக
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆனிமாதம் 17ம் நாள் 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 24 ம் நாள் 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஞானிகளும், உலக மகா சக்திகளும் மக்களுக்கு நம்பிக்கையூட்டி மக்களை காத்து வருகின்ற தேசமும் முருகப்பெருமான் அருள் தயவை பெற்று வளம்பெற்று கருணை நிறைந்த இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆனி மாதம் 17ம் நாள் **02.07.2023** ஞாயிற்றுகிழமை முதல் ஆனி **24** ம் நாள் **09.07.2023** ஞாயிற்றுகிழமை வரை உள்ள கால அளவில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்கமகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டினில் புண்ணியவான்கள் பலர் தருமங்களை தளராது செய்து நாட்டின் தர்மபலத்தை பெருக்கி வர நாட்டினில் நல்ல மழைபொழிவு உண்டாகும். தருமவான்களின் தர்மபலத்தினால் இந்தியா தமிழகம் நீர்வளம் குன்றாமல் காக்கப்படுமப்பா.

ஆனாலும் மக்களை ஆட்சி புரிவோர் மற்றும் அதிகாரிகள் தங்கள் கடமைகளை மறந்து மக்களுக்கு துன்பம் அளிக்கும் விதமாக சுயநலத்துடன் செயல்பட்டால் நீதியின் பிடியில் அகப்பட்டு நீதி தேவனால் தண்டனை பெறுவார்கள்.

நேர்மையுடன் நடந்து கொள்ளாமல் பொருள் பற்று கொண்டு நீதி, தருமத்தை மறந்து செயல்பட்டால் தண்டனைக்கு ஆளாவார்கள்.

இனிவரும் காலம் கலியுகம் முற்றி முருகப்பெருமானின் அருளால் முருகப்பெருமானின் வெளிப்பாட்டால் கலியுகம் அகன்று ஞானயுகம் பிறக்கின்ற அமைப்பும் உலகிற்கு உள்ளதாலே இனி பூமி சுத்தம் செய்யப்படுமப்பா. ஆகையினாலே சாதி, மதம், கட்சி, மொழி என்ற பாகுபாடுகளை கடந்து ஆட்சியர்கள் நன்னெறியில் வந்து செயல்பட்டு மக்களின் நம்பிக்கையை பெறும் வகையிலே ஆட்சிபுரிய முருகப்பெருமானின் ஆசியை பெற்று அருள்பாதுகாப்பும் உண்டாகி இந்தியா தமிழகம் விரைந்து முன்னேறி தெய்வீக ஞான ஆட்சி உருவாகுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–